**பாடம் 3**

# தேவனா, உலகப்பொருளா?



**மனன வசனம்**

**ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால்யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். பிலிப்பியர் 2:9-11.**

**ஆராய்ச்சிக்கு**

**சங்கீதம் 33:6-9;**

**மத்தேயு 19:16-22;**

**1பேதுரு 1:18;**

**எபிரெயர் 12:14,15;**

**யாத்திராகமம் 9:14;**

**சங்கீதம் 50:10.**

ஜனவரி 13 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பணத்தையும் உலகப்பொருளையும் மிதமிஞ்சித் தேடுவதை தேவன் எவ்வாறு பார்க்கிறார் என்பது இங்கு தெளிவாகக் காட்டப்படுகிறது. பேராசைக்காரனான அந்த ஐசுவரியவானை தேவன் ஆசீர்வதித்தார்; ஆனால் அவன் மேலும்மேலும் பதுக்கினான்; அவனைக்குறித்து கிறிஸ்து சொன்ன வார்த்தைகள் நம் எல்லாரிலும் தேவ பயத்தை உண்டாக்கவேண்டும்: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவை கள் யாருடையதாகும். தேவனிடத்தில் ஐசுவரிய வானா யிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான். லூக்கா 12:20,21.

தேவனைச் சேவிப்பது எப்படி பிரத்தியேகமான ஒரு செயலோ, அப்படித்தான் பணத்தைச் சேவிப்பதும். ஒன்று தேவன் பக்கம் இருக்கவேண்டும் அல்லது உலகப் பொருளின் பக்கம் இருக்கவேண்டும். இருபக்கத்திலும் கால்வைக்க நினைப்பது வேடிக்கையானது; ஏனென் றால், இருபக்க வாழ்க்கை சீக்கிரமே நம்மைச் சிறைப் படுத்திவிடும். பிறரை நாம் ஏமாற்றலாம், ஏன் நம்மை யும்கூட ஏமாற்றலாம்; ஆனால், தேவனை ஏமாற்ற முடியாது; ஒருநாள் அவருக்குக் கணக்குக் கொடுத்தே ஆக வேண்டும்.

உடனே தீர்மானிக்கவேண்டும்; தயங்கத்தயங்க, சாக்குப்போக்குச் சொல்லச்சொல்ல, காலந்தாழ்த்தத் தாழ்த்த, பணமும் பணஆசையும் பிடிக்கும் பிடியிலி ருந்து தப்புவது கடினம். விசுவாசத்தில் தீர்மானத்திற்கு தனி இடம் உண்டு.

தேவனையும், அவர் நமக்காகச் செய்ததையும், நாம் அவருக்குத் திரும்பச் செய்யவேண்டியதையும் தியானித்தால், நல்லதீர்மானம் எடுப்பது எளிதாகிவிடும்.

2017, ஜனவரி 21 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## சிருஷ்டிகராகிய கிறிஸ்து

*பொருள் சார்ந்த இந்த உலகத்தின் சிறப்புபற்றி ஆதி 1:1; சங் 33:6-9; ஏசா 45:11,12; எரே 51:15; யோவான் 1:3 சொல்வது என்ன?*

---

''வானங்களை விரித்ததும், பூமியின் அஸ்திபாரங்களைப் போட்டதும் கிறிஸ்துவே. அவருடைய கரங்களே விண்வெளியில் உலகங்களைத் தொங்கவிட்டன; வயல்வெளியில் மலர்களைப் பரப்பிவைத்தன. 'உம்முடைய பலத்தினால் பர்வதங்களை உறுதிப்படுத்தினீர்.''சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்.' சங் 65:6; 95:5. பூமியை அழகாலும், காற்றைப் பாடலாலும் நிறைத்தவர் அவரே. பூமியிலும் காற்றிலும் வானத்திலும் உள்ள அனைத்திலும் பிதாவின் அன்பை அவர் எழுதிவைத்தார்.'' - *EGW, DA, p 20.*

பொருள் தன்னில்தானே தீமையானது அல்ல. பொருளாலான இந்தப் பூமி தீமையானது என்றும், ஆன்மிகம்மட்டுமே நன்மையானது என்றும் சில மதங்கள் போதிக்கின்றன. ஆனால், இந்தப் பூமியிலும் நல்லவை உண்டு என்கிறது வேதம்.

இயேசுதாம் இந்த உலகத்தைச் சிருஷ்டித்தார். பின்னர் எப்படி அது தீமையாக இருக்கும்? தேவன் தந்த மற்ற ஈவுகளைப்போல, இந்தப் பூவுலகமும் தவறாகக் கையாளப்பட்டு, தீமைசெய்யப் பயன்படுத்தப்பட்டது; அதற்காக இந்த ஆதி ஈவானது தீமையாகிவிடாது. தேவன் சிருஷ்டித்தவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதுபற்றி வேதாகமம் எச்சரிக்கிறதே ஒழிய, அவர் சிருஷ்டித்தவற்றை அல்ல.

மாறாக, தேவனே இந்த உலகத்தைச் சிருஷ்டித்தார்; இவ்வுலகத்தின் பயன்களையும் நன்மைகளையும் தம் மக்கள் பெற்று அனுபவிப்பதை அவர் விரும்பினார். 'நீயும் லேவியனும், உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கும் உன் வீட்டாருக்கும் அநுக்கிரகம்பண்ணின சகல நன்மைகளினிமித்தமும் சந்தோஷப்படுவீர்களாக.' உபா 26:11; 14:26.

இயேசுவே சிருஷ்டிகர். யோவான் 1:1-3. அவருடைய சிருஷ்டிப்பின் ஒரு சிறிய பகுதிதான் இந்த உலகம். அவரிடம் சிருஷ்டிப்புத் திறன் இருப்பதால், வாழ்க்கைபற்றியும், இந்த உலகத்தில் வாழ்கிறவர்கள்பற்றியும் நன்றாக அறிவார். உலகப்பொருட்களின் முக்கியத்துவம் அவருக்குத் தெரியும்; நம்முடைய நன்மைக்காகவும், நாம் பெற்று அனுபவிக்கவுமே அவற்றைக் கொடுத்தார். இந்த ஈவுகளை மனிதர்கள் முறைகேடாகப் பயன்படுத்தினால் அல்லது இந்த ஈவுகளே கதியென்றாகிவிட்டால் என்னவாகும் என்பதும் அவருக்குத் தெரியும்; ஏனென்றால், இவை எல்லாமே தேவமகிமைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டன.

---

சிருஷ்டிக்கப்பட்ட உலகில் நிறைந்து வழியும் ஆசீர்வாதங்களைப் பாருங்கள். இவ்வுலகம் தன்னில் பெற்றிருக்கும் நன்மைகளை நாம் பாவத்தின் பயங்கர அழிவுக்குப் பின்னரும் காணமுடிகிறது. சிருஷ்டிக்கப்பட்ட உலகில் புதைந்திருக்கும் நன்மையானது, அதன் சிருஷ்டிகரின் நற்குணம்பற்றிச் சொல்வது என்ன?

இயேசு முற்றிலும் தேவனும், முற்றிலும் மனிதனுமாவார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். அவர் மனிததன்மையும் தேவதன்மையும் ஒருங்கே வாசம் செய்கிறவராக இருப்பதால், பிரத்தியேக முன்னறிவு படைத்தவரும்கூட; அதாவது, இந்த உலகத்தில் எது முக்கியம், நித்தியத்திற்கு எது முக்கியம் என்பதை அறிவார். அவர் தேவனும் மனிதனுமாக இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதால், இந்த உண்மை எவ்விதத்திலும் பொய்யாகிவிடாது; காற்றியக்கவியல் புரியாததால், விமானம் பறக்கும் திறனை இழந்துவிடுமா?

'ஒரே விஷயத்தில் இரண்டு மறைபொருள்கள் மறைந்துள்ளன - தேவனுடைய ஐக்கியத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் இருப்பது, இயேசு எனும் நபரில் தேவத்துவமும் மனிதத்துவமும் இணைந்திருப்பது. மனிதஅவதாரத்தின் இந்த உண்மையைப்போல பிரமிப்பூட்டுவதை கற்பனையிலும்கூட காணமுடியாது.' - *J. I. Packer, Knowing God (Downers Grove, Ill.: InterVarsity Press, 1973), p. 53.*

தேவன் மிகுந்த அக்கறையுள்ளவர் என்பதையும், நம் ஒவ்வொருவரையும் அவர் மிகவும் நேசிக்கிறார் என்பதையும் காட்டுவதே இயேசு இவ்வுலகத்திற்கு வந்ததற்கான ஒரு காரணம். அவர் உணர்ச்சியற்று, எங்கேயோ தூரத்தில் இருப்பவராக சிலர் நினைக்கிறார்கள்; ஆனால், நம் பரலோகப் பிதாவின் மெய்யான குணத்தை இயேசு வெளிப்படுத்தினார்.

ஆனாலும், மனிதர்களை எப்படியாவது தேவனிடமிருந்து பிரித்துவிட சாத்தான் முயன்றுவருகிறான். அவர் ஒரு நபர் இல்லையென்றும், நம்மேல் அக்கறை இல்லாதவரென்றும் காட்ட முயற்சிக்கிறான். தேவனுடைய நற்குணத்தையும் கிருபையையும் நாம் அறிந்து அனுபவிக்காதபடிக்கு, தன்னால் முடிந்த அனைத்தையும் தன்னால் முடிந்த வழிகளில் எல்லாம் செய்துவருகிறான். உலகப்பொருட்கள்மேல் மட்டுமீறிய ஆசைவைப்பதைப் பயன்படுத்தி இதை வெற்றிகரமாகநிறைவேற்றவும் செய்கிறான். இது அவனுடைய சதித்திட்டங்களில் ஒன்று.

***உலகப்பொருட்கள்மேல் பற்றுவைப்பதைப் பயன்படுத்தி, சாத்தான் எவ்வாறு தேவனிடமிருந்து நம்மைப் பிரிக்கமுடியுமென மத் 19:16-22 காட்டுகிறது?***

---

மாம்சத்தில் வந்திருந்த தேவன்தாமே அந்தப் பணக்கார வாலிபனிடம் பேசினார்; இயேசு விசேஷித்தவர் என்பதை அவனும் அறிந்திருந்தான். ஆனாலும் நிகழ்ந்தது என்ன? அவனுடைய ஏராளமான ஐசுவரியம்தான் தேவனிடமிருந்து அவனைப் பிரிக்கிற நிலை காணப்பட்டது. உலக ஆசையும் பொருளாசையும் அவனைக் குருடாக்கியிருந்தன; அதனால்தான், அவன் வருத்தமடைந்தாலும் அவனைச் சரியான பாதைக்குக் கொண்டுசெல்ல அந்த வருத்தத்தால் இயலவில்லை. தன் பொருட்களை இழந்துபோகவேண்டுமே என்று அவன் வருந்தினான்; அவற்றால் தன் ஆத்துமா பறிபோகுதே எனும் வருத்தம் இல்லை.

---

நாம் ஏழையானாலும் பணக்காரரானாலும், இந்த உலகப் பொருட்களை சரியான கண்ணோட்டத்தோடு அணுக, நாம் என்ன செய்யலாம்?

கடன் என்பது பரலோக நியதி அல்ல. ஆனால், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்து, கட்டளையை மீறினார்கள்; அதனால் மரணம் வந்தது. இப்படி, மனித இனம் தேவ நியாயத்திற்குக் கடன்பட்டுள்ளது. நாம் திவால் ஆகிவிட்டோம்; ஆன்மீக ரீதியில் ஒருபோதும் செலுத்தமுடியாத கடனாளி ஆகிவிட்டோம்.

தேவன்பின் விளைவே மீட்பின் திட்டம். கிறிஸ்து நம்முடைய பிணையாளி ஆனார். எபி 7:22. கிறிஸ்து நம்மை மீட்க வந்ததே இதுவரையிலும் செய்யப்பட்ட பரிவர்த்தனைகளில் விலையுயர்ந்தது. தேவ நியாயத்தின்படி செலுத்தவேண்டி யிருந்த விலையை அவரது உயிர்த்தியாகம் செலுத்தியது. சிலுவையில் நியாயமும் கிருபையும் சேர்ந்து நிறைவேறின; நாம் பட்டிருந்த பாவக்கடனை அங்கு இயேசு செலுத்தினார். மனிதர்களை மீட்பதற்காக தேவன் செலுத்தின ஐசுவரியம் மிகப் பெரியது. அந்த அளவு ஐசுவரியம் வேறு எதற்குமே செலவாகியிருக்காது; உலகம் அப்படியொன்றைக் கண்டிருக்காது; கேள்விப்பட்டிருக்காது. எபே 5:2.

'பரலோகத்தின் கருவூலம் முழுவதையும் இந்த உலகத்திற்குள் ஊற்றி, கிறிஸ் துவின்மூலம் பரலோகத்தையே நமக்குத் தந்து, ஒவ்வொரு மனிதனின் சித்தத்தை யும் பற்றுகளையும் சிந்தையையும் ஆத்துமாவையும் தேவன் விலைகொடுத்து வாங்கினார்.' - *EGW, COL, P 326.*

**கிறிஸ்து என்னென்ன விஷயங்களிலிருந்து நம்மை இரட்சித்திருக்கிறார்? பட்டியலிடுங்கள்: *கொலோ 1:13; 1தெச 1:10: 1பேதுரு 1:18; எபி 2:14,15; கலா 3:13; வெளி 1:5.***

யோவான் 19:30 இல், 'முடிந்தது' என்று இயேசு சொன்னார்; பேசப்பட்ட வார்த்தைகளிலேயே முக்கியத்துவம் மிக்க வார்த்தை இது. சிலுவையில் இயேசு சொன்ன கடைசி வார்த்தை இது. அவருடைய ஊழியப்பணி நிறைவேறினதையும், நம்முடைய பாவக்கடன் 'முற்றிலும் செலுத்தப்பட்டதையும்' அவருடைய இறுதி அறிவிப்பு தெரிவிக்கிறது. நம்பிக்கையிழந்தவராக அப்படிச் சொல்லாமல், தொலைந்துபோன ஓர் உலகை மீட்டுவிட்ட வெற்றிக்களிப்பில் அப்படிச் சொன் னார். மீட்பின் சிலுவையை நோக்கிப் பார்த்தால், தற்கால பயனையும் எதிர்கால நம்பிக்கையையும் உள்ளடக்கிய கடந்தகால ஒரு நிகழ்வை அது வெளிப்படுத்து கிறது. பாவத்தையும் மரணத்தையும் பிசாசின் கிரியைகளையும் வேர்முதலாக அழித்துப்போடவே இயேசு தம் ஜீவனைக் கொடுத்தார். தகுதியே இல்லாதவர் களாக இருந்தும், நாம் மீட்கப்பட்டிருக்கிறோம். எபே 1:7. இரட்சிப்பின் அற்புதங் களைக் காண்பதே பரிசுத்த பூமியில் நடத்தல் ஆகும்.

மீட்பராக வந்த கிறிஸ்துவில் அன்பே உருவான தேவனைக் காண்கிறோம். நம்மை மீட்பதே அவருடைய முதல் நோக்கமாக இருந்தது. அப்படியானால் நம்மையும், நம்மோடு உறவு வைப்பதையும் அவர் எவ்வளவாக விரும்புகிறார்! நியாயத்தின் கோரிக்கையை அவர் நிறைவேற்றிவிட்டார்; இப்போது நாம் திரும்ப என்ன செலுத்தப்போகிறோம் என்று எதிர்பார்க்கிறார்.

நீங்கள் செய்த ஒவ்வொரு தீமைக்குமான விலையை முற்றிலுமாகக் கிறிஸ்து செலுத்தி விட்டார்; அதற்கு உங்களுடைய எதிர்வினை எப்படி இருக்கவேண்டும்? யோபு 42:5,6.

பார்வோனிடன் தேவன் பேசியபோது, ‘‘பூமியெங்கும் என்னைப்போல வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இந்தமுறை நான் சகல வித வாதைகளையும் உன் இருதயத்திலும், உன் ஊழியக்காரர்மேலும் உன் ஜனங்கள்மேலும் அனுப்புவேன்’ என்று சொன்னார். யாத் 9:14.

***என்னைப்போல வேறொருவரும் இல்லை என்று தேவன் சொல்வதின் அர்த்தம் என்ன?***

---

‘எல்லையில்லாதவரின் குணத்தையும் கிரியைகளையும் முற்றிலும் புரிந்து கொள்ளவேண்டுமா? எல்லையுள்ள மனிதர்களிடம் அதற்கான அறிவு இல்லை. அதிகாரமும் படிப்பறிவும் மிகுந்தவர்களுக்கும் புத்திசாலிகளுக்கும்கூட, பரிசுத்தர் ஒரு மறைபொருளாகவே இருக்கிறார்.’ – *EGW, 5T, p 698,699.*

தேவனுக்கு ஒப்பானவர் இல்லை. 1இராஜா 8:60. நாம் புரிந்துகொள்ள இயலாத விதங்களில் அவர் சிந்திக்கிறார்; நினைவுகூருகிறார்; செயல்படுகிறார். நம்முடைய சாயலில் அவரை வைத்துப் பார்க்க நாம் எவ்வளவுதான் முயன்றாலும் தேவன் தேவனாகவே இருப்பார். ஒவ்வொரு பனித்துகளையும், ஒவ்வொருவரின் மூளையையும் முகத்தையும் குணஇயல்பையும் அவரே தனித்தன்மையுடன் படைத்தார்; ‘வேறொருவரும் இல்லை.’ 1இராஜா 8:60. அவர் சிருஷ்டிகர்; எனவே, தம் சிருஷ்டிகளைக் காட்டிலும் சிருஷ்டிகராகிய அவர் நிச்சயம் தனித்தன்மை உடையவராகத்தான் இருப்பார்.

***தேவன் தம் சிருஷ்டிப்பைக் காட்டிலும் விசேஷித்தமானவர் என்பதுபற்றி பின்வரும் வசனங்கள் சொல்வது என்ன? 1சாமு 2:2; சங் 86:8; ஏசா 55:8,9; எரே 10:10; தீத்து 1:2.***

---

---

தேவன் எப்படிப்பட்டவர்? அவரிடம் என்னவெல்லாம் இருக்கின்றன? அவர் என்னவெல்லாம் செய்கிறார்? இவற்றை அறிந்திருந்தால், அவருக்கு ஒப்பாக யாருமே இருக்கமுடியாது என்பது புரியும். ஆனாலும், ஒரு விஷயத்தில் அவருக்குப் போட்டி இருக்கிறது; அது மனிதரின் அன்பையும் பற்றையும் பெறுவதற்கான ‘போட்டி.’ இதனால்தான் அவர் தம்மை ‘எரிச்சலுள்ள’ தேவன் என்கிறார். யாத் 34:14. மனிதர்களை தேவன் சுயாதீனர்களாகப் படைத்தார்; அதாவது, அவரை அல்லது வேறு யாரையாவது சேவிக்க அவர்களுக்கு சுதந்தரம் இருக்கிறது. இதுதான் பல விதங்களில் மனிதர்களுக்கு பிரச்சனையை உருவாக்குகிறது. அதாவது, தாங்கள் உருவாக்கப்பட்ட சாயலை மறந்து பிற தேவர்களைச் சேவிப்பதைத் தெரிந்துகொள்கிறார்கள்; ஆனால் அவர்கள், தங்களைச் சிருஷ்டித்தவரும் சர்வலோகத்திற்கும் சொந்தக்காரருமான தேவனைமட்டுமே சேவிக்கவேண்டும். அதனால்தான் அவர் ‘எரிச்சலுள்ள’ தேவனாக இருக்கிறார்.

உங்கள் வாழ்க்கையில் உங்களுடைய பற்றைப் பெறுவதற்கு தேவனோடு போட்டிப்போடுகிற விஷயங்கள் ஏதாவது உண்டா?

## உண்மையான உரிமையாளர்

தேவன் நம்மைச் சிருஷ்டித்தார்; நம்மை மீட்டுக்கொண்டார்; எனவே, நாம் அவருக்கே சொந்தமானவர்கள். நாம் மட்டுமல்ல, நமக்குரிய அனைத்துமே தேவனுக்கே சொந்தமானவைகள். நாம் செய்கிற தீர்மானங்களுக்குமாத்திரமே நாம் சொந்தக்காரர்களாக இருக்கிறோம்.

மாறாக, நாம் பெற்றிருக்கும் அனைத்திற்கும் நாமே சொந்தக்காரர்கள் என்பது உலகத்தாரின் அபிப்பிராயமாக இருக்கிறது. இது ஒரு வஞ்சனை. தங்களிடமுள்ள பொருட்களுக்கு தாங்கள்தாம் சொந்தக்காரர்களென நினைக்கிற கிறிஸ்தவர்கள், வேதாகமப் போதனைக்கு விரோதமான நம்பிக்கையை உடையவர்கள்.

நாம் அல்ல, தேவனே அனைத்திற்கும் சொந்தக்காரர். யோபு 38:4-11. நாம் பரதேசிகள், புறக்குடிகள். லேவி 25:23. இப்படிதான் இஸ்ரவேலரும் வாக்குத்தத்த தேசத்தில் இருந்தார்கள். அடுத்த வேளை மூச்சுக்கே நாம் தேவனைத்தாம் சார்ந்திருக்கிறோம். அப் 17:25. நமக்குச் சொந்தமானதாக நாம் நினைக்கிற எல்லாமே அவருக்குச் சொந்தமானவை. நாம் அவருடைய உக்கிராணக்காரர்கள் மட்டுமே; உலகப்பொருட்களையும், தொட்டுணரமுடியாத விஷயங்களையும் தேவனுடைய மகிமைக்கேதுவாக நாம் நிர்வாகம்செய்யவேண்டும்.

***தேவன் எதற்கெல்லாம் சொந்தக்காரரென பின்வரும் வசனங்கள் கூறுகின்றன? உபா 10:14; சங் 50:10; 104:16; எசே 18:4; ஆகாய் 2:8; 1கொரி 6:19,20. நாம் பெற்றிருக்கிற பொருட்கள் குறித்து நம்முடைய பார்வை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?***

---

'எல்லாம் தேவனுக்குரியவை. அவருடைய கோரிக்கைகளை மனிதர்கள் நிராகரித்தாலும், அவர்களுக்கும் தேவன் தம் ஆசீர்வாதங்களை ஏராளமாகப் பொழிகிறார்; தங்கள் சுயஇச்சையை நிறைவேற்றவும் அவற்றை அவர்கள் பயன்படுத்தினாலும், தங்களுடைய உக்கிராணத்துவக் கணக்கை அவர்கள் கொடுத்தே ஆகவேண்டும்.' - *EGW, 9T, p 246.*

தேவன் நம் எஜமானாகவும், நாம் உக்கிராணக்காரராகவும் இருக்கும்போது, அங்கே ஓர் உறவு உள்ளது; அதன்மூலம் நம்மைப் பரலோகிற்குத் தகுதியானவர்கள் ஆக்குகிறார்; அது பிறருக்கும் நன்மையாகவும் ஆசீர்வாதமாகவும் அமைகிறது. ஆனால், உண்மையற்ற உக்கிராணக்காரர்கள் தங்கள் எஜமானுக்குரியவைகளை அவரிடமிருந்து பறிக்கிறார்கள். தேவம் தம் சித்தத்தை ஒருபோதும் நம்மேல் திணிக்கமாட்டார். தேவன்நம்மைச்சிருஷ்டித்தார்; அவர் திரும்ப வரும்வரையிலும் இவ்வுலகப் பொருட்களை நிர்வகிக்கும் பொறுப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார். அவற்றை நாம் எவ்வாறு நிர்வகிக்கிறோம் என்பது அவரோடு நாம் வைத்திருக்கிற உறவைப் பொருத்ததாகும்.

---

உங்களிடம் உள்ளவை அனைத்துமே உங்களுக்குச் சொந்தமானவை அல்ல, தேவனுக்குச் சொந்தமானவை என்பது எதை வலியுறுத்துகிறது? அப்படியானால், நீங்கள் பெற்றிருக்கும் ஒவ்வொன்றைப்பற்றியும் உங்களுடைய பார்வை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?

## மேலும் படிக்க:



அருமையான ஒரு தோட்ட வீட்டில் ஆதாம்-ஏவாளை வைத்து, அதைப் பண்படுத்தி நிர்வகிக்கும் வேலையை தேவன் அவர்களுக்குக் கொடுத்தார்; அதுதான் முதல் உக்கிராணத்துவப் பணி. ஆதி 2:15. மிகவும் சாதகமான சூழ்நிலையில், அந்தத் தோட்டத்தை பச்சைப்பசேலென வைத்திருப்பது கடினமானதே இல்லை. தேவன் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்; அவர்களுடைய பொறுப்புபற்றிச் சொன்னார். ஏதேனைப் பராமரிக்கும் பணியானது அப்புதிய குடும்பத்தினருக்கு வாழ்க்கையில் அர்த்தமும் சந்தோஷமும் கொடுப்பதாக இருந்தது.

'ஆளுகை' என்றால் 'கட்டுப்பாட்டின்கீழ், ஆட்சியின்கீழ் கொண்டுவருவதாகும்.' ஆதி 1:26,28. தேவனுடைய சிருஷ்டிப்பைக் கடுமையாக அல்ல, தயாளமாக அவர்கள் ஆள வேண்டியிருந்தது. இதே பொறுப்பு இன்றும் உண்டு. தேவன்தாம் உரிமையாளர், தாங்கள் அவருடைய நிர்வாகிகள் என்பதை ஆதாம்-ஏவாள் உணர வேண்டியிருந்தது. தாங்கள் உரிமையாளர் அல்லர்; பொறுப்பாளர்தாம் என்பதை இருவரும் ஆரம்பம்முதலே உணர்ந்திருக்க வேண்டியிருந்தது; அதைத் தேவனும் விரும்பினார். தங்கள் பொறுப்பில் உண்மையாக இருப்பதை அவர்கள் தேவனுக்குக் காட்டவேண்டியிருந்தது.

'ஏதேனைப் பராமரிக்கும் வேலை ஆதாம்-ஏவாளுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் 'அதைப் பண்படுத்தவும் காக்கவும்' வேண்டியிருந்தது. சந்தோஷமாக வேலைசெய்தார்கள். மனதும் சிந்தையும் சித்தமும் இசைந்து செயல்பட்டன. அவர்களுக்கு களைப்போ சோர்வோ உண்டாகவில்லை. பயன்மிக்க வேலையிலும், பயன்மிக்க பேச்சிலும் நேரம் கழிந்தது. வேலை இனிமையான அனுபவமாக இருந்தது. தேவனும் கிறிஸ்துவும் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்களுக்கு முழுச் சுதந்தரம் கொடுத்திருந்தார். அவர்களுடைய ஏதேன் வீட்டின் உரிமையாளர் தேவன். அவருடைய ஊழியர்களாக, அந்த வீட்டை அவரிடமிருந்து அவர்கள் பெற்றிருந்தார்கள். - *10MR, p 327.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *உலகத்தின் சொந்தக்காரர் தேவன் என்றால், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் நமக்குள்ள பொறுப்பு என்ன? அரசியலுக்காக பேசி, சிருஷ்டியைத் தொழுகிற சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்போல இல்லாமல், கிறிஸ்தவர்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் எப்படிப்பட்ட மனநிலையுடன் இருக்கவேண்டும்?*

2. *எரிச்சல் என்றவுடன் அது மோசமான குணம் என்போம்; கைவிடவேண்டிய குணம் என்போம். அப்படிப்பட்ட எந்த எதிர்மறை எண்ணங்களும் இல்லாமல், எரிச்சலுள்ள தேவன் என்பதை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?*

3. *தேவன் சிருஷ்டித்தவற்றை முறையே பயன்படுத்துவதற்கும் முறைகேடாகப் பயன்படுத்துவதற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை எவ்வாறு அறியலாம்? இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்வது ஏன் முக்கியமானது?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*